# யா/அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை

# 125ம் ஆண்டு சிறப்பு பரிசில் நாள் நிகழ்வு 2017

| | | |
|---|---|---|
| காலம் | :- | 04.11.2017 சனிக்கிழமை |
| நேரம் | :- | மு.ப 9.00 மணி |
| இடம் | :- | இராஜமாணிக்கம் திருமண மண்டபம் |
| தலைமை | :- | திரு வே.குணசீலன்(அதிபர்) |

## பிரதம விருந்தினர்

கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள்

(கௌரவ கல்வி அமைச்சர் (வடக்கு மாகாணம்)

## சிறப்பு விருந்தினர்கள்

திரு அருணாசலம் அகிலதாஸ் அவர்கள்

(பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ்வலயம்)

திரு நா.சிவநேசன் அவர்கள்

(கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)

## கௌரவ விருந்தினர்கள்

திருமதி பு.கணபதிப்பிள்ளை அவர்கள்

(ஓய்வுநிலை அதிபர் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

திரு இ.ஜெயகாந்தன் அவர்கள்

(பொருளாளர் பழையமாணவர் சங்கம் அச்சுவேலி மத்திய கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலை சமூகம்

# நிகழ்ச்சி நிரல்

- ❖ விருந்தினரை அழைத்துவரல்
- ❖ மங்கல விளக்கேற்றல்
- ❖ இறைவணக்கம்
- ❖ தேசிய கொடியேற்றல்- தேசிய கீதம்
- ❖ பாடசாலைக் கொடியேற்றம்-பாடசாலை கீதம்
- ❖ வரவேற்பு நடனம்
- ❖ அதிதிகளை மேடைக்கு அழைத்துவரல்
- ❖ வரவேற்புரை
- ❖ அதிபர் அறிக்கை
- ❖ கௌரவ விருந்தினர்கள் உரை
- ❖ சிறப்பு விருந்தினர்கள் உரை
- ❖ பிரதம விருந்தினர் உரை
- ❖ பரிசில் வழங்குதல்
- ❖ கலை நிகழ்வுகள்
- ❖ நன்றியுரை

## அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல இறைவனை மனதில் வேண்டி யா/அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையின் பரிசில் நாள் அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன். எமது பாடசாலையின் இந்த ஆண்டின் பரிசில் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கௌரவ கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்களே இன்றைய விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ்வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு அருணாசலம் அகிலதாஸ் அவர்களே கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு நா.சிவனேசன் அவர்களே ஓய்வு இன்றைய விழாவின் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்களே பழைய மாணவர் சங்கப் பொருளாளர் திரு இ.ஜெயகாந்தன் அவர்களே மேடையில் அமர்ந்திருக்கும் பெரியோர்களே அயற் பாடசாலை அதிபர்களே ஆசிரியர்களே பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே பழைய மாணவர்சங்க உறுப்பினர்களே பெற்றோர்களே நலன்விரும்பிகளே, மாணவர்களே அனைவருக்கும் அன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி கந்தைய சர்வேஸ்வரன் அவர்கள் 1956 ஆம் ஆண்டு கட்டப்பிராயில் பிறந்தார். அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியையும் உயர்நிலைக் கல்வியையும் செங்குந்தா இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி

மற்றும் யாழ்ப்பாணம் மத்தி கல்லூரியிலும் பெற்று 1986 ஆம் ஆண்டில் அரசறிவியலில் கலைமாணி பட்டத்தையும் பின்னர் 1988 ஆம் ஆண்டில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து 2006 ஆம் ஆண்டில் கலாநிதிப்பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

தனது கல்வித் தகைமையின் உயர்ச்சியினால், கொழும்பு பல்கலைக்கலகத்தில் வரலாறு அரசறிவியல் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றி கொண்டிருந்தார். அதேவேளை நீதி மற்றும் அரசியல் அமைப்பு விவகார அமைச்சின் கீழான தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவில் நிகழ்ச்சித் திட்ட அதிகாரியாகவும் கடமையாற்றிய காலத்தில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார்.

1990 தொடக்கம் 1994 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சென்னை அறிவியல் ஆய்வு நிறுவகத்தில் கனிஷ்ட நிபுணத்துவ ஆலோசகராகவும், 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 1997 ஆம் ஆண்டு வரை சமூக விஞ்ஞானிகள் கழகத்தின் தமிழ் மொழியிலான வெளியீடுகளுக்குப் பொறுப்பான பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

அவர் மேற்கொண்ட பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளுக்காகப் பல விருதுகளைப் பெற்றுக் கொண்டார். இந்த வகையில் "ஸ்ரீலங்காவின் பத்திரிகைச் சுதந்திரம்" என்ற ஆய்வுக் கட்டுரைக்காக 2008 ஆம் ஆண்டில் தமிழ் இதழியலாளர்கள் சர்வதேச சங்கத்தினரால் (IATJ)விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2002 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்காவின் அரசியல் மற்றும் அரசாங்க முறைமைகள் என்னும் தலைப்பில் ஈபேட் ஸ்ரங்க் நிதியத்தினால் நடத்தப்பட்ட செயல்திட்ட அமுலாக்கல் செயலமர்வில், பயிற்றுனராக இருந்து பல பயிற்சியாளர்களை உருவாக்கினார்.அதேபோன்று சமூக விஞ்ஞான ஆய்வுக்கான இந்தியப் பேரவையினால் கலாநிதி பட்டத்திற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு கௌரவ விருது வழங்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் இருந்து தினக்குரல் பத்திரிகையின் வார இதழில் தொடர்ச்சியாக அரசியல் மற்றும் சமுகவியல் சார்ந்த பத்தி எழுத்தாளராக பல நூற்றுக் கணக்கான கட்டுரைகளை எழுதியுள்ளார். அதே போன்று www.ipcs.com என்ற இணையத்தளத்தில் 2011 ஆம் ஆண்டில் "சமாதனத்திற்கான அரசியல்" என்ற ஆய்வுக்கட்டுரையையும். ஸ்ரீலங்காவின்சமாதன வழிமுறைகள் என்ற கட்டுரையும் எழுதி

அரசியல் ஆய்வாளர்களின் பாராட்டினைப் பெற்றுக் கொண்டார்.

அதே போன்று 2008 இல் புது டெல்லியில் உள்ள பிரபலமான பென்ரகன் அச்சகத்தினரின் "தெற்காசியா மற்றும் தந்திரோபாயங்கள்" என்ற தொகுப்பின் வருடாந்த வெளியீட்டிலும் ஸ்ரீலங்கா தொடர்பான ஆய்வுக் கட்டுரை பிரசுரமானது.

இதேபோன்று அவர் அரசியல் ஆய்வுக் கட்டுரைகளையும் உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளின் ஊடகங்களிலும் ஆங்கிலத்தில் எழுதித் தன்னை ஒரு சிறந்த அரசியல் பத்தி எழுத்தாளராக வெளிப்படுத்தினார்.

இவர் ஆய்வுக் கட்டுரைகளும், நூல்களையும் வெளியிட்டமைக்கு அவர் பல்வேறு நிறுவனங்களில் பெற்றிருந்த ஆய்வு அனுபவங்களே காரணமாகும். 2006 இல் மனிதநேய முகவர்களுக்கான கூட்டமைப்பின் வடமாகாணத்திற்கான ஆய்வுக்கான நிபுணத்துவ ஆலோசகரக இருந்த பொழுது "சிறி லங்காவில் சமதானத்திற்கான சூழலை உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குதல்" என்ற ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டிருந்தார்.

1998-1999 காலப் பகுதியில் NIPU நிறுவனத்தில் ஆய்வுக்கான இணைப்பாளராகக் கடமையாற்றிய பொழுது. "இருமொழி அரசை ஸ்தாபிப்பதை நோக்கி" என்ற கட்டுரையை எழுதி ஒரு நாட்டில் மொழிரீதியாக ஏற்படக் கூடிய பிரச்சினைளுக்கு தீர்வாக சில ஆலோசனைகளும் தெரிவிக்கப்பட்ட முக்கியமான ஒரு ஆய்வாகும்.

1996 இல் கொழும்பு பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவின் அங்கத்தவராக இருந்த பொழுது எழுதப்பட்ட "ஸ்ரீலங்காவில் இடம் பெயர்ந்த மக்களின் உள சமுகப் பிரச்சினைகள் தொடர்பான பகுப்பாய்வு" என்ற ஆய்வுக் கட்டுரை ஜேர்மனியில் பிரசுரிக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளாராக இருந்த பொழுது ஒரு மாணவன் முதுமாணியைப் பெற்றுக் கொண்ட பின்னர். கலாநிதி பட்டத்திற்கான ஆய்வை மேற்கொள்வதற்கான முழுமையான வழிகாட்டல்களை மேற்கொண்டதால் எத்தனையோ முதுமாணி மற்றும் முதுதத்துவமானி மாணவர்களின் மத்தியில் அவர் 2016 இல் கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

சர்வதேச ரீதியாகவும் மற்றும் உள்நாட்டின் பல்வேறு பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற கருத்தரங்குகளிலும் செயல மர்வுகளிலும் பங்கேற்று இலங்கை தொடர்பான பல்வேறு பதிவுகளை மேற்கொண்டிருந்தார்.

இவ்வாறான ஆற்றல்களையும் தகைமைகளையும் பெற்றிருந்த கலாநிதி கந்தையாசர்வேஸ்வரன் அவர்கள் தற்போது மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராகப் பணியாற்றுகின்றார். அவர் இன்றைய பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது பெரும் மகிழ்ச்சியளிக்கின்றது.

இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினர் திரு அருணாசலம் அகிலதாஸ் அவர்கள் 1958 ஆம் ஆண்டு தென்மாரட்சி ஒட்டு வெளி மிருசுவிலில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யா/ஒட்டுவெளி அ.மி.த.க பாடசாலையில் கற்று இடைநிலைக் கல்வியை யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கற்று யாழ்ப்பாண பல்கலைகழகத்திற்கு தெரிவாகி கலைமாணிப் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்து 1977ம் ஆண்டில் அரச சேவைக்குள் நுழைந்த இவர் 1984ம் ஆண்டு வரை களஞ்சியப் பொறுப்பாளராகப் பணியாற்றி அதே ஆண்டில் ஆசிரியர் நியமனத்தைப் பெற்று பு/அல் அல்கா முஸ்லீம் மகாவித்தியாலயம், கற்பிட்டி காரை தீவு மகா வித்தியாலயம் யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் வரலாறு, பொருளியல், சமூகக்கல்வி, புவியியல் ஆகிய பாடங்களைக் கற்பித்து பல மாணவர்களை சிறப்பு சித்தி பெற வைத்தார்.

1991ல் அதிபர்சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டு யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் 1994ஆம் ஆண்டு வரை உப அதிபராகக் கடமையாற்றி அதே ஆண்டில் யா/கச்சாய் அ.த.க பாடசாலையில் அதிபராகப் பொறுப்பேற்று 2000ம் ஆண்டு வரை அப் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபாட்டார் 1996ல் அதிபர் சேவை தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு பெற்ற இவர் 2000–2006 காலப்பகுதியில் யா/கோப்பாய் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் பணியாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றினார்.

2000-2007காலப்பகுதியில் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அதிபராக பணியாற்றி 14.09.2007ல் யா/கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று சென்று

05.09.2012 வரை அக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரும் பணியாற்றினார் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இவர் அதிபராக இருந்த காலம் அக்கல்லூரிக்கு பொற்காலமாகும். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளுக்கு நிகராக அப்பாடசாலையை வளர்த்தெடுத்ததில் அவருடைய பணி பாராட்டத்தக்கது கல்வி செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளில் தேசிய மட்டம் வரை கொண்டு சென்று வெற்றி பெறச் செய்தார் அக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக நடாத்தி முடித்ததுடன் பாடசாலையின் உள்ளாக தொடர்பாடல் வசதிகள் நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்கள் அதிகரிக்கச் செய்தமை பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர் தொகை 50ல் இருந்து 150ஆக அதிகரித்தமை கல்லூரியின் மாணவர் தொகை அதிகரித்தமை இந்துக்களின் துடுப்பாட்டத்தினை அறிமுகப்படுத்தியமை போன்ற பல சாதனைகளை நிலை நாட்டிய பெருமை இவரையே சாரும்.

11.06.2011ல் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்வு பெற்று தென்மராட்சி, தீவக கல்விவலயங்களில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் பணிபுரிந்து 01.01.2014ல் இருந்து நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் பணிபுரிந்தார். நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றினார் 09.03.2016ல் இருந்து யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் பணியாற்றி வருகின்றார். யாழ்ப்பாண கல்வி வலயத்தில் பாடசாலைகளை மதிப்பீடு செய்யும் வெளிவாரி மதிப்பீட்டு நடவடிக்கைக்கு தலைமையேற்று வருடம் தோறும் எல்லாப் பாடசாலைகளையும் குறித்த காலத்தில் மதிப்பீடு செய்து வெளிவாரிமதிப்பீட்டினை வினைத்திறன் உடன் செயற்படுத்தி வருகின்றார். அத்துடன் மாணவர் பாராளுமன்றச் செயற்பாடுகளுக்கு பொறுப்பாகச் செயற்பாட்டு பாடசாலைகளின் மாணவர் பாராளுமன்றங்களை உருவாக்குவதற்கு சிறப்பான ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்.

39 வருட அரச சேவையில் நல்ல ஆசிரியராக, நல்அதிபராக, சிறந்த கல்வி அதிகாரியாக பணியாற்றி 07.01.2018ல் அரசசேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எமது பாடசாலை சமூகம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் இன்றைய தினம் எமது பாடசாலை பரிசில் நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது எமக்கு பெருமையளிக்கின்றது.

இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு நா.சிவநேசன் அவர்கள் இணுவில் பிரதேசத்தை சேர்ந்தவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று யாழ் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் தேசியக்கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் யாழ் பல்கலைக்கழகத்தில் முதுகல்வி மாணிப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

இவர் 25.03.1990ல் ஆசிரியர் சேவையில் நுழைந்து வலிகாமம் கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சிறப்பான ஆசிரியப் பணியாற்றி 01.01.1998 தொடக்கம் அதிபர் சேவைக்கு உயர்வு பெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் பல பாடசாலைகளில் அதிபராக பணிபுரிந்து 02.07.2015 தொடக்கம் யாழ் கல்வி வலயத்துக்குட்பட்ட யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி 08.06.2016 தொடக்கம் பதவி உயர்வு பெற்று கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார். கோப்பாய்க் கோட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்து சேவையாற்றி வரும் மதிப்புக்குரிய சிறப்பு விருந்தினர் அவர்கள் இன்றைய விழாவில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமையடைகின்றது.

இன்றைய விழாவின் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி பு.கணபதிப்பிள்ளை அவர்கள் அச்சுவேலி பிரதேசத்தை சேர்ந்தவர் கலைமாணி பட்டதாரியான இவர் அச்சுவேலி மத்திய கல்லூரியில் கல்விபயின்று ஆசிரியர் சேவையில் இணைந்து இக்கல்லூரியிலே ஆசிரியராகக் கடமையாற்றி பின்பு இக்கல்லூரியின் அதிபராகப் பணிபுரிந்து தற்போது ஓய்வு நிலை அதிபராக இருக்கின்றார்.

அவர் இன்றைய பரிசளிப்பு நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

திரு இராசதுரை ஜெயகாந்தன் அவர்கள் எமது பாடாலையின் பழைய மாணவர் ஆவார். அச்சுவேலி மத்திய கல்லூரியின் பழைய

மாணர் சங்கப் பொருளாளராக தனது பணியை சிறப்பாக ஆற்றி வருகின்றார் அச்சுவேலி மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலைகளின் பௌதீக வள அபிவிருத்தியில் பழைய மாணவர் சங்கத்தின் பணி பாரட்டத்தக்கது முகாமைத்துவ உதவியாளாராக பணிபுரியும் இவர் எமது பாடசாலையின் இன்றைய பரிசளிப்பு நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இத்தகைய கல்வி மான்களின் கரங்களினால் எமது மாணவர்கள் பரிசில் பெறுவது பெரும் பேறாகும்.

## பாடசாலையின் வரலாற்றுச் சுருக்கம்

2012ம் ஆண்டு அரசின் ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை என்னும் நாமத்துடன் புதிய பாடசாலையாக இயங்கி வருகின்றது. அதற்கு முதல் யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவாகவே இயங்கி வந்தது.

அச்சுவேலி மத்திய கல்லூரி 1892ம் ஆண்டு ஆரம்பிக்கப் படுவதற்கு முதல் அச்சுவேலி கோவில்பற்று மக்கள் திண்ணைப் பள்ளியில் கற்றதற்கு சான்றுகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது இத் திண்ணைப்பள்ளியின் வளர்ச்சியாகவே எமது பாடசாலை பெண்கள் பாடசாலையாகவும் அச்சுவேலி மத்திய கல்லூரி ஆண்கள் பாடசாலையாகவும் இயங்கி வந்தன.

மிசனரி அமைப்புக்களின் வருகை யாழ்ப்பாண கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தத்தை தோற்று வித்தது எனலாம் அந்த வகையில் அச்சுவேலியில் அமெரிக்கன் மிசனரியினால் அமைக்கப்பட்ட தேவாலயத்தின் வளவினுள் 1892ல் ஆண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆண்கள் பாடசாலை ஆங்கிலப் பாடசாலையாகவும் பெண்கள் பாடசாலை ஸ்ரேசன் மிசன் பாடசாலையாகவும் இயங்கி வந்தன. பெண்கள் பாடசாலை தரம் 1-6 வரை வகுப்புக்களைக் கொண்டிருந்தன.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தென்னிந்திய திருச்சபையின் பங்களிப்பு பாராட்டத்தக்கது.

எமது பாடசாலையின் முதல் மாணவன் சுவாமி ஞானப்பிரகாசர் ஆவார் இவர் எமது பாடசாலையின் முதல் மாணவன் என்பதில் பெருமை அடைகின்றது.

1960ம் ஆண்டில் அரசாங்கம் பாடசாலைகளை சுவீகரித்துக் கொண்டது 1971ம் ஆண்டு எமது பாடசாலையையும் ஆங்கிலப் பாடசாலையையும் ஒன்றாக இணைத்து ஒரே நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு 125ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட எமது பாடசாலை இன்றைய தினம் தனது 125ஆவது ஆண்டினை நினைவு கூரும் முகமாக இன்றைய பரிசில் நாளினை சிறப்பு பரிசில் நாளாக கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

## ஆசிரியர் ஆளணி

எமது பாடசாலையின் அங்கிகரிக்கப்பட்ட ஆளணி 14 ஆகும். தற்பொழுது நிரந்தர ஆசிரியர்களாக 11 பேரும் தொண்டர் ஆசிரியர்களாக இருவருமாக 13 பேர் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் இவர்களுடைய அர்ப்பணிப்பு மிகுந்த சேவையும் குழுவாக சேர்ந்து இயங்கும் திறனும் பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல பெரிதும் உதவுகின்றது. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைக்கு எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வருடம் புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர் திரு ச.சந்திரகாசன் அவர்களை வருக வருக என வரவேற்பதுடன் எமது பாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி சி.ஞீபால்ராஜ், திருமதி சு.ஜீவகரன் ஆசிரியர்களுக்கு அவர்களது பணி சிறக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிபர் சேவை தரம் 3 போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு பிரதி அதிபராக பதவி உயர்வு பெற்றச் சென்றிருக்கும் திரு ப.பார்த்தீபன் அவர்களை அதிபர் சேவை பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2017

இவ்வருடம் 68 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 65 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள்ளார்கள் இது 96% சித்தியாகும் 10 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார்கள்.

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப் புள்ளிக்கு மேல் | 70 புள்ளிக்கு மேல் | சித்திவீதம் |
|---|---|---|---|---|
| 2015 | 67 | 04 | 47 | 70% |
| 2016 | 60 | 10 | 53 | 88% |
| 2017 | 68 | 10 | 65 | 96% |

கடந்த மூன்று வருட பெறுபேறுகளை நோக்கும் போது சித்தி பெறும் மாணவர்களின் சதவீதம் அதிகரித்து செல்கின்றுது இம் முறை 96 வீதம் மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனார்கள் இவர்கள் இடைநிலைக் கல்வியை கற்பதற்கான பூரண தகுதியுடன் இந்த ஆண்டின் இறுதியில் எமது பாடசாலையை விட்டு வெளியேறுகின்றார்கள். இவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்பெறுபேறுகளை பெற்றுத்தந்த எமது பாடசாலை ஆசிரியர்களை வாழ்த்துவதுடன் தரம் 5ல் கால நேரம் பாராது கற்பித்த ஆசிரியர்கள் திருமதி சிவபாமா ராகவன் திருமதி சுவர்ணாதேவி சிவனேசராசா திரு ச.சந்திரகாசன் ஆகியோரை வாழ்த்துவதுடன் மனம் நிறைந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்களுடன் சேர்ந்து பணியாற்றிய கல்விசாரா ஊழியர்கள் திருமதி ய.ஹரிகரன் செல்வி ஜெகாளினி ஜெயச்சந்திரபோஸ் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## ஆசிரியர்கழகம்

எமது பாடசாலை ஆசிரியர் கழகமானது ஆசிரியர் நலன்புரி விடயங்களில் சிறப்பாகச் செயற்பட்டு நல்லுறவைப் பேணி வருகின்றது இக்கழகத்தின் தலைவராக திரு ச.சந்திரகாசன் அவர்களும், செயலாளராக திருமதி சி.பார்த்தீபன் அவர்களும், பொருளாளராக திருமதி பு.புவனேந்திரன் அவர்களும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்கள்.

### பாடசாலை அபிவிருத்திக்குழு

எமது பாடசாலையின் அபிவிருத்திக் குழுவின் செயற்பாடு பாராட்டதக்கது. பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக மாதாந்தக் கூட்டத்தில் எந்த செயற்பாடு வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றது இக்குழுவின் செயலாளராக திரு இ.ரசிகரன் அவர்களும் பொருளாளராக ஆசிரியர் திருமதி ப.இரட்ணபாலன் அவர்களும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்கள்.

### பழைய மாணவர் சங்கம்

எமது பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர்சங்கத்தின் பங்களிப்பு பாராட்டதக்கது.

பாடசாலையின் நூலகம் அமைத்தல் பௌதிகவள விருத்தி, மாணவர் கல்விக்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல் போன்ற செயற்பாடுகளை ஆற்றி வருகின்றது.

### கனடா பழைய மாணவர் சங்கம்

கனடா நாட்டில் வசிக்கும் எமது பழைய மாணவர்களினால் உருவாக்கப்பட்ட அச்சுவேலி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா கிளையினரின் ஒத்துழைப்பு பாராட்டத்தக்கது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அச்சுவேலி எமது பாடசாலையின் 107மாணவர்களுக்கு 347200/= பெறுமதியான கற்றல் உபகரணப் பொதிகளை வழங்கி கற்றலுக்கு உதவிபுரிந்துள்ளார்கள் இவர்களின் பணிசிறக்க வாழ்த்துக்கள்.

### 125 வது சிறப்புப் பரிசில் நாள்

எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 125 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. 125ஆவது ஆண்டினை நினைவு கூரும் முகமாக எமது பாடசாலையின் பழைய மாணவர்களான திரு ச.கெங்காதரன்(தாய்லாந்து) திரு இ.கேசவன் (லண்டன்) ஆகியோரின் வேண்டுகோளிற்கு அமைவாக இந்த ஆண்டின் பரிசில் நாளினை சிறப்பு பரிசில் நாளாக கொண்டாடப்படுகின்றது. இன்றைய இந்த பரிசில் நாள் நிகழ்விற்கான முழு செலவினையும் அவர்களே பொறுப்பேற்றுள்ளார்கள். இந்த பரிசில் நாள் நிகழ்விற்காக ரூபா 100,000 அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள். கடல் கடந்து சென்றாலும் தாம்கற்ற பாடசாலையை மறவாது 125வது ஆண்டு நிறைவு பரிசில் நாளினை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு பங்களிப்புச் செய்த திரு ச.கெங்காதரன், திரு இ.கேசவன் ஆகியோருக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்பில் சிறப்பான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் பணி சிறக்க வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பௌதீக வள அபிவிருத்தி தேவை

எமது பாடசாலையில் 305 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் எமது பாடசாலை ஆரம்பப் பாடசாலையாக இருப்பதனால் ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் பொருத்தமான வகுப்பறைகள் இல்லை தற்காலிகமாக அடைக்கப்பட்ட 20×20 அளவு கொண்ட வகுப்பறைகளே இருக்கின்றன. தற்காலத்தில் Smart வகுப்பறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கபட்டு வருகின்றன. எமது பாடசாலையிலும் Smart வகுப்பறை உருவாகுவதற்கு பொருத்தமாக 75 ஆண்டுகள் பழமையான 70×25 அளவில் இரண்டு மாடிகளைக் கொண்ட வகுப்பறைத் தொகுதி ஒன்றினை பெற்றுத் தருமாறு கௌரவ கல்வி அமைச்சர்களிடம் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

தற்காலத்தில் தகவல் தொடர்பாடல் துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் எமது பாடசாலை மாணவர்களுக்கு அடிப்படை கணனி அறிவை வழங்குவதற்காக கணனி அறை ஒன்றினை ஏற்படுத்துவதற்கு கணனிகள் தேவையாக உள்ளன.

பிரதான வீதிக்கு அருகில் அமைந்திருக்கும் 130×25 அளவுடைய வகுப்பறைக் கட்டடம் தற்காலிக வகுப்பறைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. வகுப்பறை நிலங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. இக்கட்டடத்தை புணரமைப்பு செய்து நிரந்தர வகுப்பறைகளாக (Smart Class Room) உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

### பாடசாலைக்கு வழங்கப்பட்ட உதவிகள்

- கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர் அரியகுட்டி பரஞ்சோதி அவர்களினால் பன்முகப்படுத்தப்பட்ட மாகாண சபை உறுப்பினருக்கான நிதியில் இருந்து ரூபா 75000 அதிபர் அலுவலக திருத்தத்திற்காக ஒதுக்கீடு செய்துள்ளார்.
- கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆனோல்ட் அவர்கள் அதிபர் அலுவலக திருத்தத்திற்காக ரூபா 100,000 தனது மாகாண சபை உறுப்பினர்களுக்கான நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளார். மேற்குறித்த உதவிகளை வழங்கிய கௌரவ மாகாணசபை உறுப்பினர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- கனடா பழைய மாணவர் சங்கத்தினரால் 107 மாணவர்களுக்கு 347200/= பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கி அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவியுள்ளார்கள் இவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- 125 ஆவது ஆண்டின் சிறப்பு பரிசில் நாளினை நடாத்துவதற்கு அனுசரணையாளர்களாக இருக்கும் எமது பழைய மாணவர்களான திரு இ.கேசவன்(லண்டன்) திரு ச.கெங்காதரன்(தாய்லாந்து) ஆகியோருக்கு எமது பாடசாலைச் சமூகம் நன்றி கூறுவதில் பெரும் மகிழ்வடை கின்றோம்.
- ஆண்டுதோறும் எமது பரிசில் நாள் நிகழ்வினை நடாதடதுவதற்கு மண்டபத்தினை தந்துதவும் திரு ம.சிவமூரத்தி அவர்களுக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அன்பான பெற்றோர்கள்**

நீங்கள் பாடசாலைக்கு வழங்கும் ஒத்துழைப்பை நாம் பெரிதும் மதிக்கின்றோம். உங்களது பிள்ளைக்கு கல்வியே மூலதனம் உங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக வாழ கல்வியே அத்திவாரம் ஆகும். குறிப்பாக தரம் ஒன்றில் இருந்து ஐந்து வரை ஆரம்பக்கல்வியை உங்கள் பிள்ளைகள் சரியாக பெற்றுக் கொள்வதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு பெரிதும் தேவைப்படுகின்றது. பிள்ளைகளின் ஒழுங்கான வரவை உறுதிப்படுத்தல் வீட்டில் பிள்ளை கற்பதற்கு ஏற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் கற்றலில் பிள்ளைகளுக்கு ஆர்வத்தைத் தூண்டுதல் வாசிப்பு பழக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குதல் என்பன உங்களாது தலையாய கடமையாகும் உங்கள் பிள்ளையின் கல்வி தொடர்பில் பாடசாலையுடன் நெருக்கமான உறவைப் பேணுங்கள் என்று உங்களை அன்பாகக் கேட்டுக் கொண்டு இன்றைய பரிசில் நாள் அறிக்கை நிறைவு செய்கிறேன்.

**2016ல் தரம் 1ல் பரிசில் பெறுவோர் விபரம்**

| இல | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 1 | சு.பவித்திரன் | சமயம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | வாசிப்பு | 2ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 2 | கு.அஜித்தனா | கணிதம் | 1ம் இடம் |
| | | ஆக்கம் | 1ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சித்திரம் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |

| | | | |
|---|---|---|---|
| 3 | தெ.சந்தோஷ் | சுற்றாடல் | 1ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| | | ஆக்கம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 4 | பி.லவிசனா | வாசிப்பு | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சுற்றாடல் | 2ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 2ம் இடம் |
| | | சமயம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 5 | அ.மிதுஷாந்தி | சுற்றாடல் | 1ம் இடம் |
| | | கணிதம் | 1ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | ஆக்கம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 6 | க.உஷானா | சுற்றாடல் | 1ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 7 | கி.சாகித்தியன் | தமிழ் | 3ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 8 | சு.சதுர்த்திகன் | தமிழ் | 3ம் இடம் |
| | | ஆக்கம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 9 | சி.கவினா | சமயம் | 2ம் இடம் |
| | | வாசிப்பு | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 10 | அ.அஸ்வினா | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 11 | சி.விந்துஜன் | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |

| இல | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 12 | டி.கரிஷ்ணவி | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | ஆக்கம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 13 | சி.லிலைக்ஷன் | ஆக்கம் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 14 | து.தர்ஷான் | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 15 | ப.தர்விகன் | தமிழ் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 16 | ஜெ.துவாரகா | ஆக்கம் | 3ம் இடம் |
| | | | |
| 17 | யோ.கஜானா | சித்திரம் | 1ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 18 | தி.தஸ்வின் | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | வாசிப்பு | 3ம் இடம் |
| | | சிறப்புத் தேர்ச்சி | |
| 19 | வா.தனுஷ்கா | சித்திரம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 20 | சு.பவித்தன் | கணிதம் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 21 | அ.விசாளி | சுற்றாடல் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |

**2016ல் தரம் 1ல் சிறப்புத்தேர்ச்சி பெறுவோர் விபரம்**

1. ஜெ.வக்ஷன்
2. கெ.கேதுஜன்
3. சு.கஜானன்
4. மு.சங்கீத்
5. ப.அபிஷன்
6. ச.இளங்கீரன்
7. வி.நிகாருஜன்
8. கு.சஜிபவன்
9. சு.கபிஷன்
10. சு.கோமதி
11. சி.ரஸ்மிதா

11. ந.மதுஷிகா
12. பா.டயானி
13. த.தர்ஷகா
14. ம.கபிஷா
15. ச.கவிஷாளினி
16. உ.கிரோஷிகா
17. க.றியானா
18. ச.யானுகா
19. வி.மதுசிகா
20. ஆ.அனோசியா
21. ம.றதுசாயினி

2016ல் தரம் 2ல் பரிசில் பெறுவோர் விபரம்

| இல | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 1 | சு.மதுஷன் | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சுற்றாடல் | 2ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 2ம் இடம் |
| | | சமயம் | 3ம் இடம் |
| | | சித்திரம் | 3ம் இடம் |
| | | வாசிப்பு | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 2 | சு.சந்தோஷ் | தமிழ் | 1ம் இடம் |
| | | சமயம் | 2ம் இடம் |
| | | சுற்றாடல் | 2ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | சித்திரம் | 2ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 3. | ர.கிருஷாயினி | சமயம் | 1ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | வாசிப்பு | 2ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 4 | இ.திவ்யன் | சுற்றாடல் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சித்திரம் | 1ம் இடம் |
| | | வாசிப்பு | 1ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 5 | ச.சாம்பவி | கணிதம் | 1ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| | | ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 3ம் இடம் |
| | | சிறப்புத் தேர்ச்சி | |
| 6 | ஜீ.குசோத்தமன் | சமயம் | 2ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| | | சிறப்புத் தேர்ச்சி | |
| 7 | ர.ரிமோஷி | வாசிப்பு | 1ம் இடம் |
| | | சிறப்புத் தேர்ச்சி | |
| 8 | ம.ஜனனி | கணிதம் | 2ம் இடம் |
| | | சிறப்புத் தேர்ச்சி | |

| இல | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 9 | ற.றனோஜன் | சொல்வதெழுதுதல் | 2ம் இடம் |
| | | சிறப்புத் தேர்ச்சி | |
| 10 | த.துவாரகா | சமயம் | 3ம் இடம் |
| | | சிறப்புத் தேர்ச்சி | |

**2016ல் தரம் 2ல் சிறப்புத்தேர்ச்சி பெறுவோர் விபரம்**

1. செ.பவிராஜ்
2. கோ.ஷஜானி
3. வி.அருணந்தன்
4. உ.சரணியா
5. சு.கரிஸ்னா
6. த.தனுஷியா
7. சு.மதுஷன்
10. ந.சியானுசா
11. யோ.அபிநயா
12. ரா.கஜானன்
13. தி.பவித்திரா
14. சு.கயூரி
15. உ.யதுர்ஷிகா

**2016ல் தரம் 3ல் பரிசில் பெறுவோர் விபரம்**

| இல | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 1 | ரா.துவாரகன் | கணிதம் ,ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | ஆக்கம், சிங்களம் | 1ம் இடம் |
| | | பொதுஅறிவு | 1ம் இடம் |
| | | சுற்றாடல், சித்திரம் | 2ம் இடம் |
| | | வாசிப்பு | 2ம் இடம் |
| | | சமயம், தமிழ் | 3ம் இடம் |
| | | சிறப்புத் தேர்ச்சி | |
| 2 | ர.ரிஸ்னா | சுற்றாடல், சித்திரம் | 1ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | சமயம், தமிழ் | 2ம் இடம் |
| | | சிங்களம்,பொதுஅறிவு | 2ம் இடம் |
| | | வாசிப்பு | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 3 | ம.தூரிகா | சமயம், தமிழ் | 1ம் இடம் |
| | | சிங்களம், வாசிப்பு | 1ம் இடம் |
| | | பொதுஅறிவு | 2ம் இடம் |
| | | கணிதம், ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | ஆக்கம் சுற்றாடல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 4 | ச.நவிசன் | தமிழ் | 1ம் இடம் |
| | | சித்திரம் | 2ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |

| இல | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 5 | க.கஜீவன் | கணிதம், ஆக்கம் | 2ம் இடம் |
| | | பொதுஅறிவு | 2ம் இடம் |
| | | வாசிப்பு | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 6 | ப.கஜமுகன் | வாசிப்பு | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | சிறப்புத் தேர்ச்சி | |
| 7 | க.லேணுஷா | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சிங்களம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 8 | ஜீ.நிரோஜன் | பொது அறிவு, வாசிப்பு | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 9 | செ.றெனுசன் | கிறிஸ்தவம் | 2ம் இடம் |
| | | ஆக்கம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 10 | ச.சஜிர்தன் | சொல்வதெழுதுதல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 11 | ச.நிதுர்சன் | சொல்வதெழுதுதல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 12 | ப.சானுஷன் | சித்திரம் | 1ம் இடம் |
| | | | |
| 13 | வி.ஆரணி | சித்திரம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 14 | உ.சியாமினி | சொல்வதெழுதுதல் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 15 | இ.விதுசன் | கிறிஸ்தவம் | 1ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |

### 2016ல் தரம் 3ல் சிறப்புத்தேர்ச்சி பெறுவோர் விபரம்

1. ர.லக்ஸ்மன்
2. வ.புருஷோத்தமன்
3. ப.தரணிகன்
4. க.சாருமதி
5. சி.விதுனா
6. க.கனிநிலா
7. பா.பிஜிந்தா
8. ஆ.நிஜீலன்
9. கா.தாருஷன்
10. ர.ஜஸ்மிதா
11. வி.வஸ்ணவி
12. ஜெ.வர்ணியா

## 2016ல் தரம் 4ல் பரிசில் பெறுவோர் விபரம்

| இல | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 1 | த.லக்ஷாயினி | தமிழ், சமயம், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | சிங்களம்,சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | வாசிப்பு | 2ம் இடம் |
| | | கணிதம், பொதுஅறிவு | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 2 | பா.ஷயானா | சிங்களம், பொதுஅறிவு | 1ம் இடம் |
| | | தமிழ், கணிதம், சமயம், | 2ம் இடம் |
| | | சுற்றாடல், | 2ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 3 | பி.மதுமிதா | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 4 | இ.தர்சன் | கணிதம், சித்திரம் | 1ம் இடம் |
| | | சமயம், சுற்றாடல், | 2ம் இடம் |
| | | ஆங்கிலம், | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 5 | ஜெ.மகிராம் | வாசிப்பு | 1ம் இடம் |
| | | பொதுஅறிவு | 2ம் இடம் |
| | | ஆக்கம், சித்திரம் | 3ம் இடம் |
| | | சொல்வதெழுதுதல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 6 | பி.ஜெனில்ரன் | கணிதம், ஆக்கம் | 1ம் இடம் |
| | | சித்திரம் | 2ம் இடம் |
| | | சமயம், சுற்றாடல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 7 | யோ.அர்ச்சனா | றோ.கத்தோலிக்கம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம், சொல்வதெழுதுதல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 8 | த.சிகானா | சிங்களம், ஆக்கம் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 9 | டெனிசியன் | றோ.கத்தோலிக்கம் | |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 10 | பிரியந்தன் | றோ.கத்தோலிக்கம் | |
| | | சிறப்புத்தேர்ச்சி | |

**2016ல் தரம் 4ல் சிறப்புத்தேர்ச்சி பெறுவோர் விபரம்**

1. இ.பவன்ராஜ்
2. க.தனுஷாந்
3. அ.துவாரகன்
4. த.பிரியதரன்
5. சா.கங்கீத்
6. பி.யதுசாந்
7. ம.சிந்துர்ஷன்
8. ர.ராஜீவன்
9. இ.டர்சனா
10. வி.சானுஜா
11. த.கஜசிகா
12. த.ஜெனனிக்கா
13. ச.கயல்விழி
14. சு.தாரகன்
15. பி.பிரதீப்
16. சு.விதுசன்
17. ப.அனோஜன்
18. க.மிதுன்ராஜ்
19. ம.துளசிகன்
20. தெ.டன்சிகா
21. செ.மகிஷா
22. சி.டிலக்சனா
23. உ.பரணிகா
24. தி.மோகவதனி
25. வி.கிருசிகா
26. செ.கம்சிகா

**2016ல் தரம் 5ல் பரிசில் பெறுவோர் விபரம்**

| இல | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 1 | வி.பிரமிளா | தமிழ் | 1ம் இடம் |
| | | சிங்களம் | 2ம் இடம் |
| | | சுற்றாடல், ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 2 | வி.கோபிகா | கணிதம், சுற்றாடல், சமயம் | 1ம் இடம் |
| | | சிங்களம்,ஆக்கம்,சித்திரம் | 1ம் இடம் |
| | | வாசிப்பு, சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | தமிழ், ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | பொதுஅறிவு | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 3 | ம.அபினயா | பொதுஅறிவு, ஆக்கம், சித்திரம் | 1ம் இடம் |
| | | வாசிப்பு, | 1ம் இடம் |
| | | தமிழ், சுற்றாடல், சொல்வதெழுதுதல் | 2ம் இடம் |
| | | கணிதம், சமயம், சிங்களம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 4 | கா.லிந்துசன் | சொல்வதெழுதுதல் | 1ம் இடம் |
| | | சுற்றாடல் சித்திரம் | 2ம் இடம் |
| | | தமிழ், வாசிப்பு | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |

| | | | |
|---|---|---|---|
| 5 | ச.நர்த்தனன் | பொதுஅறிவு, ஆக்கம், வாசிப்பு | 2ம் இடம் |
| | | தமிழ், சித்திரம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 6 | சு.சானுசன் | ஆக்கம், சித்திரம் | 1ம் இடம் |
| | | கணிதம், சிறப்புத்தேர்ச்சி | 2ம் இடம் |
| 7 | ஸ்ரீ.மதுஷிகா | சமயம் | 2ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 8 | வ.மதுசா | சொல்வதெழுதுதல் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |
| 9 | சி.சஞ்சயன் | ஆக்கம் | 3ம் இடம் |
| | | சிறப்புத்தேர்ச்சி | |

**2016ல் தரம் 5ல் சிறப்புத்தேர்ச்சி பெறுவோர் விபரம்**

1. த.சுபைசன்
2. இ.திருசிகன்
3. ற.றக்சாஜினி
4. சி.துஷானி
5. வி.பானுஷா
6. ர.லக்ஷிகா
7. உ.றம்மியா
7. சு.அக்ஷயா
8. சி.பவித்திரா
9. ஜெ.கவிநயா
10. ச.நிசாமினா
11. கொ.ஆதீஸ்
12. கு.டனோஜன்
13. இ.றியன்
14. செ.நிதுஷாந்
15. ரி.வைஷ்ணவன்
16. உ.வித்தகன்
17. க.ஜம்சிகா
18. வி.தனுசியா

## புலமை பரிசில் பரீட்சை – 2017
## அமரர் புஸ்பநாதன் ஜெயகாந்தன் ஞாபகர்த்த நினைவுப்பரிசில் ஆசிரியர் திருமதி மதிவதனா சிவநாதன்

| இல | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1 | இரவீந்திரன் தர்சன் | 172 |
| 2 | ஜெகதீஸ்வரன் மகிராம் | 155 |
| 3 | பிராங்லின் குணநாயகம் ஜெனில்ரன் | 161 |
| 4 | உதயசூரியன் பரணிகா | 162 |
| 5 | யோன்கெனடி அர்ச்சனா | 168 |
| 6 | ரவி ரஜீவன் | 177 |
| 7 | பாஸ்கரன் ஷயானா | 172 |
| 8 | தமிழ்மாறன் லக்சாஜினி | 167 |
| 9 | இராமச்சந்திரன் டர்சனா | 166 |
| 10 | தவயோகராசா பிரியதரன் | 156 |

## அன்பளிப்பு

| இல | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு க. பாஸ்கரன் | 5000.00 |
| 2 | திரு க.ரவீந்திரன் | 5000.00 |
| 3 | திரு இ.ஜெகதீஸ்வரன் | 5000.00 |
| 4 | திருமதி பி.சிறிறமணி | 5000.00 |
| 5 | திருமதி பு.கணபதிப்பிள்ளை | 5000.00 |
| 6 | திரு தி.உதயசூரியன் | 5000.00 |
| 7 | செல்வி உ.சிங்கையாரியரட்ணம் | 2000.00 |
| 8 | திருமதி த.ஆசா | 2000.00 |
| 9 | திரு நா.இராமச்சந்திரன் | 2000.00 |
| | **பொருள் அன்பளிப்பு** | |
| | திருமதி மதிவதன சிவநாதன்<br>அமரர் புஸ்பநாதன் ஜெயகாந்தன் ஞாபகர்த்த<br>நினைவுப்பரிசில் | |
| | திரு க.இரவீந்திரன்<br>நிறைகுடம் - 01 | |




நன்றி

